7. அறிவிப்புகள்

(அ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:. *1995*–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). *1995*–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1995*–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) தொழிலாளர் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.